<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 134/2021**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் –பி.வா.சா.</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபு | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 05.08.2025 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஆகஸ்ட் 05ம் நாள் சாட்சியம்.

---

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ஈரோடு மாவட்டம், அரச்சலூர் எனது சொந்த ஊராகும். இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி எனக்கு உறவினர் கிடையாது. அவர் எனக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுத்தவர் ஆவார். இந்த வாதி இந்த வழக்கினை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்குத் தெரியாது. வாதியின் பூமியை வாதி அனுபவிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை 2021ல் நான் கிரையம் வாங்கினேன். நான் தாவா சொத்தை கிரையம் பெற்ற போது தாவா சொத்தின் பழைய ஆவணங்கள் மற்றும் வில்லங்க சான்றிதழை பார்வையிட்டேன்.

2. 1983ம் வருட பாகப் பிரிவினை ஆவணத்தை பார்த்தேன். அந்த ஆவணம் ஏற்பட்ட தேதி மற்றும் யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. 1983ம் ஆண்டு ஆவணத்தில் 2ம் பிரதிவாதி தரப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

அவர் மாமனார் தான் சொத்தை பிரித்து வைத்தார். 1983ம் ஆண்டு ஆவணத்தில் பாகஸ்தர்களுக்கு நீர் பாய்ச்சிக் கொள்ளவும் உரிமையுண்டு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் பொது என்ற வார்த்தை குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் அது பொதுவாகத்தான் எழுதப்பட்டு இருந்தது. பொது என்று வார்த்தை எதுவும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு குறிப்பிடப்படாத நிலையில் எனது ஆவணத்தில் பொது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /R.பாண்டி மகாராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.